## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 118 நாள்: 26.02.2026

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி, சி.எம்.டி.ஏ. மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று (26.02.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, மேட்டுப்பாளையம் அருந்ததி நகர் விளையாட்டு மைதான மேம்பாட்டுப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மாநகராட்சி மூலமாகவும், சி.எம்.டி.ஏ. மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக இன்று திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட மேட்டுப்பாளையம், அருந்ததி நகர் விளையாட்டு மைதானத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து. பணிகள் அனைத்தும் திட்ட காலத்திற்குள் தரமாக மேற்கொண்டு முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், வார்டு-71க்குட்பட்ட பொல்லேரி அம்மன் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு பணியினை விரைந்து முடித்திடவும், மேட்டுப்பாளையம், பி.என்.சி மில் குடியிருப்புவாசிகளின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் சி.எம்.டி.ஏ., பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைக் குடிநீர் வாரியம் அலுவலர்கள் இணைந்து இப்பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள், கழிவுநீர் செல்லும் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுத்திட திட்ட மதிப்பீடு தயார்

செய்து விரைவில் பணிகளை தொடங்கிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர், பெரம்பூர் நெடுஞ்சாலை தெற்கில் உள்ள அருள்மிகு விநாயகர் திருக்கோயிலினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கோயில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வது குறித்து அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ச்சியாக, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்காவில் சி.எம்.டி.ஏ. சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, பெரம்பூர் தொழில்நுட்பப் பூங்காவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.5.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பூங்காவில் விளையாட்டுத் திடல், நடைப்பயிற்சி கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு வசதிகளை ஏற்படுத்திட அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் (சி.எம்.டி.ஏ.) டாக்டர் பால் பிரின்லி ராஜ்குமார், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன் பாபு, மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம், இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் திருமதி நித்தியகலா, உள்ளாட்சிப் பிரதிநிதி திரு.தமிழ் வேந்தன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**